# SABARAGAMUWA PROVINCIAL DEPARTMENT OF EDUCATION
## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தரம்-12 (வணிகப்பிரிவு)** **இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019**

**வணிகக்கல்வி I**
**Business Studies I**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை
General Certificate of Education (Adv. Level) Examination

**இரண்டு மணித்தியாலயங்கள்**
Two hours

**அறிவுறுத்தல்கள் :-**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத் தாளில் தரப்பட்ட இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- **01** தொடக்கம் **30** வரையான வினாக்களுக்கு (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகச் சரியான** விடைகளை தேர்ந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் கூற்றில் இடுக**

01. பின்வரும் மனித தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான சில குனாம்சங்கள் ஆகும்.
    - A – வரையறுக்கபடாதவை
    - B – உருவாக்ககூடிய ஆற்றல் கொண்டவை
    - C – பலவகைப்பட்டவை
    - D - உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை
    - E - வரையறுக்கப்பட்டவை
    - F - பொதுவானவை

    மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மனித விருப்பங்களுக்கான குனாம்சங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதிளை தெரிவு செய்க.

    1. A,B,D 2. A,B,C 3. A,C,E 4. B,D,E 5. B,D,F

    (………)

02. பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஊடகத்துறை தொடர்பிலான அக்கறையுடைய சில தரப்பினரையும் Y நிரலானது அவர்களது அக்கறைக்கான சில காரணங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

| X | Y |
|---|---|
| A நிருபர்கள் | 1. ஊடகத் தொழல் வாண்மையாளர்களுக்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு |
| B பொதுமக்கள் | 2. தகவல்களை சேகரிப்பதற்கு |
| C அரசாங்கம் | 3. தகவல்களை முகாமை செய்வதற்கு |
| D ஊடகவியலாளர்களின் சங்கம் | 4. தகவல்கள் ஊடாக விழிப்படையச் செய்வதற்கு |
| E ஊடக நிருவனங்களின் நிர்வாகிகள் | 5. தகவல்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு |

அக்கறையுடைய தரப்பினரையும் அவர்களது அக்கறைக்கான காரணங்களையும் சரியாக இணைத்து காட்டும் தொகுதியயைத் தெரிவுசெய்க.

1. A-1,B-2,C-5,D-3,E-4
2. A-2,B-4,C-5,D-1,E-3
3. A-5,B-2,C-3,D-4,E-1
4. A-1,B-3,C-4,D-5,E-2
5. A-3,B-1,C-2,D-4,E-5

(………)

03. பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.
A. பொருளாதார விலை மட்டத்திலான அதிகரிப்பு
B. தொழில் தருனர் - தொழில் பெறுனர் முரன்பாடுகளில் அதிகரிப்பு
C. போட்டியில் அதிகரிப்பு
D. தொழில் பெறுனர் திரும்பலில் குறைவு
E. நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு
F. நுகர்வோர் சங்கங்களின் பலத்தில் அதிகரிப்பு
G. மூலப்பொருட்கள் வீணாகுவதில் குறைவு
H. வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் அதிகரிப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அகச்சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

1. A,B,C,D 2. A,D,E,G 3. B,C,E,H 4. B,D,E,G 5. C,F,G,H

(.........)

04. சாமந்தி என்பவர் வெதுப்பக உற்பத்தி பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செயடவதற்காக ''சாமந்தி ஹோட்டல்'' என்னும் வணிகத்தை மாகான சபையின் அனுமதியுடன் ஆடைத்தொழிற்சாலை ஒன்றுக்கு அண்மையுள்ள தனது வீட்டில் தாபித்தார். இவர் இரு வேலையாட்களை வேளைக்கு அமர்த்தியிருந்தவுடன் ஹோட்டலின் முகாமையைத் தனது மகனிடத்தில் ஒப்படைத்திருந்தார்.
இதன்படி சாமந்தியின் வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரின் எண்ணிக்கை.
1. 3 2. 4 3. 5 4. 6 5.7 (.........)

05. வணிக நிறுவனம் தனது போட்டியாளர்களைக் கருத்திற் கொண்டு உருவாக்கும் ஓர் ஒழுக்க நெறி.
1. சகல ஊழியர்களையும் சரியாக நடத்துதல்
2. விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்
3. சமய குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாதிருத்தல்
4. உயர்தரமுடைய பொருட்களை வழங்குதல்
5. முதியோரை கனம் பண்ணுதல்

(.........)

06. பின்வருவனவற்றுள் எதனை ஓர் அரசாங்க வரி வருமானமாக கருத்திற்கொள்ள முடியும்.?
1. சாரதி அனுமதிப்பத்திர கட்டணங்கள்
2. புகையிரத கட்டணங்கள்
3. இறைவரி கட்டணங்கள்
4. தபாற்கட்டணங்கள்
5. வங்கி கட்டணங்கள்

(.........)

07. பின்வருவன நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சில முக்கியமான விடயங்கள் ஆகும்.
A. நியாயமான பணப் பெறுமதியில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஆற்றல்
B. வியாபார நெறிமுறையற்ற நடவடிக்கைகளுக்கெதிராக சட்டரீதியான பாதுகாப்பை பெறுவதற்கான ஆற்றல்
C. வாடிக்கையாளர் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்
D. இலாபத்தை உச்சப்படுத்துவற்கான ஆற்றல்
E. நன்மதிப்பை உயர்துவதற்கான ஆற்றல்
F. பொருட்களை எதிர்பார்க்கப்பட்ட நியமங்களையும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளையும் உறுதிப்படுத்துவற்கான ஆற்றல்

மேலே தரப்பட்டவற்றுள் வாடிக்கையாளருக்கு மட்டும் பொருந்தக்கூடிய சரியான இணைப்பை காட்டும் விடையை தெரிவு செய்க.

1. A,B,E 2. A,B,F 3. A,C,D 4. C,D,E 5. C,D,F

(.........)

08. மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பில் சரியான கூற்று எது?
1. நபர் ஒருவர் வரையறுக்கப்படாத தேவைகளையும் வரையறுக்கப்பட்ட விருப்பங்களையும் கொண்டுள்ளார்.
2. வணிகர் ஒருவர் தேவைகளை உருவாக்க முடியும் ஆனால் விருப்பங்களை உருவாக்க முடியாது
3. தேவைகள் பொதுவானவையாக காணப்பட்டபோதும் விருப்பங்கள் நபருக்கு நபர் வேறுப்பட கூடும்.
4. அன்பு,உணவு,பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பக்கல்வி என்பன தேவைகளுக்கான சில உதாரணங்களாகும்.
5. விருங்களைத் திருப்தி செய்வதற்காக நபர் ஒருவர் உற்பத்திப்பொருளை தெரிவுசெய்தல் தேவை எனப்படும்.

(.........)

09. எந்தவொரு நிறுவனத்துடன் சம்பந்தப்படாத ஒரு பொதுவான குணாம்சம்.
1. வளங்களின் பயன்பாடு
2. மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் புர்த்தி செய்தல்
3. பொருட்கள் சேவைகளின் விநியோகம்
4. இலாபம் உழைத்தலை உத்தேசமாக கொண்டு இயங்குதல்
5. அரசாங்க கொள்கைகள் மற்றும் பிரமாணங்களைப் பின்பற்றுதல்

(.........)

10. உற்பத்தி பொருள் வகைப்படுத்தல் பாய்ச்சலையும் அதற்கான உதாரணத்தையும் மிகச்சரியாக எடுத்துக்காட்டும் விளக்கப்படம் எது?
1. தொட்டுணரக்கூடியவை→ பொருட்கள்→ நீண்ட வாழ்வுதன்மை கொண்டவை → மோட்டார வாகனம்
2. தொட்டுணரக்கூடியவை→ பொருட்கள்→ நுகர்வோர் சேவை → போக்குவரத்து
3. தொட்டுணரமுடியாதவை→ சேவை→ நேர்சேவை → வங்கிகள்
4. தொட்டுணரமுடியாதவை→ பொருட்கள்→ பயன்பாட்டு அடிப்படை → தளபாடங்கள்
5. தொட்டுணரக்கூடியவை→ பொருட்கள்→ பயன்பாட்டு அடிப்படை → காப்புறுதி

(.........)

11. வணிகச் சூழல் சார் விசைகள், காரணிகள் மற்றும் அவற்றின் செல்வாக்குகளை சரியாகக் குறிப்பிடப்படும் கூற்று எது?
1. வணிகமொன்றின் கணிணி இயக்குநர்கள் அகக் காரணியாகக் காணப்படுவதுடன் அவர்களின் திறன்கள் தொடர்பான பற்றாக்குறையானது வணிகத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுவகின்றது.
2. போட்டியாளர்களின் அதிகரிப்பானது வணிகமொன்றுக்கு அச்சுருத்தலாகக் காணப்படுவதுடன் அது அண்மித்த வெளிவாரி சூழலின் ஒரு விசையாக காணப்படுகின்றது.
3. வெளிநாட்டு நாணயமாற்று வீதம் குறைவடைதலானது ஏற்றுமதியாளருக்கு ஒரு வாய்ப்பாக காணப்படுவதுடன் அது அண்மித்த வெளிவாரி சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.
4. நிதி நிறுவனங்கள் பேரண்ட சூழலின் ஒரு விசையாக காணப்படுவதுடன் அவற்றிடையே காணப்படும் கடுமையான போட்டி வணிகங்களுக்கான ஒரு வாய்ப்பாக காணப்படுகின்றது.
5. நிறுவனம்சார் கட்டமைப்புக்குள்ளேயான சரியான தொடர்பாடலானது நிறுவனத்துக்கான பலமாக காணப்படுவதுடன் அது அண்மித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாக காணப்படுகின்றது.

(.........)

12. பின்வருவன நுகர்வோர் பாதுகாப்பனூடாக கிடைக்கும் சில அனுகூலங்கள் ஆகும்.
A. கொடுப்பனவு பெறுமதிக்கு சமமாக பொருட்களை நுகரச் செய்ய முடிதல்
B. நுகர்வோர் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள முடிதல்
C. உற்பத்தி பொருள் மேம்படுத்தல் கிரயத்தை குறைத்துக்கொள்ளல்
D. உற்பத்திப்பொருளின் தரங்களை உறுதிப்படுத்தல்
E. விற்பனை புரள்வை அதிகரித்துக் கொள்ள முடிதல்
F. வியாபார நெறிமுறையற்ற செயல்களுக்கு எதிராக செயற்பட முடிதல்

மேலே தரப்பட்டவற்றுள் வணிகர் ஒருவருக்கு மட்டுமான நலன்களை உள்ளடக்கியுள்ள விடை எது?
1.ABC 2. ADF 3. BCE 4. BCF 5. BDF

(.........)

13. மூசு என்பவர் சொற்பொழிவற்ற விருப்பமுடையவர். வழமையாக அவரது சொற்பொழிவுகள் நீண்டதாக காணப்படும். அவர் தனது சொற்பொழிவுகளில் மிகவும் சிக்கலான சொற்களை பயன்படுத்துவதுடன் சில வேளைகளில் மக்களை தரக்குறைவாகவும் பேசுவார். இவர் தனது அபிப்ராயத்தை மிகவும் உறுதியாக வெளியிடுவார். ஆனால் சில தகவல்களை பிழையானவையாக இருக்கும். ஆயினும் அவரது சொற்பொழிவாற்றும் பாங்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகும்.

மேலே தரப்பட்ட தகவல்களின்படி மூசுவினால் பயனுதியான தொடர்பாடலின் எத்தனை குணாம்சங்கள் மீறப்பட்டுள்ளன.

1. 1 2. 2 3. 3 4. 4 5. 5

(.........)

14. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் x நிரலில் சர்வதேச தரங்கள் சிலவும் Y நிரலில் அவற்றினால் உள்வாங்கப்படும் துறைகளும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A) ISO 9001 | 1. ஓழுங்கமைக்கப்பட்ட சுகாதாரமும் பாதுகாப்பும் பற்றிய முகாமைத்துவ துறை |
| B) ISO 14001 | 2. உணவு பாதுகாப்பு முகாமைத்தவ துறை |
| C) ISO 22000 | 3. அமைப்பினால் சூழல் முகாமைத்துவத் துறை |
| D) OHSAS 18001 | 4. அமைப்பினால் தர முகாமைத்தவத்துறை |

1. A-1,B-2,C-3,D-4 2. A-3,B-4,C-2,D-1 3. A-2,B-3,C-4,D-1

4. A-4,B-3,C-1,D-2 5 .A-4,B-3,C-2,D-1 (…….)

15. கீழ்வரும் விடயங்களுள் நிதிக்கொள்கையுடன் தொடர்புடையது எது?

1. வருமானவரி வீதத்தை உயர்த்துல்
2. அரச நடைமுறைச் செலவை குறைத்தல்
3. வட்டி வீதத்தை உயர்த்துதல்
4. வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையைக் குறைத்தல்
5. அரச முதலீட்டுச் செலவை உயர்த்துதல். (.........)

16. கீழே தரப்பட்டவற்றுள் கைத்தொழிற்பொருட்களின் கூறு எனக் கருதக்கூடியது எவை?

1. வசதிப்பண்டம் / மூலப் பொருளும் உதிரிபாகமும்/ மூலதனப் பொருள்
2. மூலப் பொருளும் உதிரிப்பாகமும்/ மூலதனப் பொருள்/ கடைப்பொருள்
3. மூலப் பொருளும் உதிரிப்பாகமும்/ மூலாதனப் பொருள் / வழங்கலும் வணிக சேவைகளும்
4. வணிகப் பொருள்/ மூலப் பொருள் / மூலதனப் பொருள்
5. தனிச்சிறப்புப் பொருள் / மூலப் பொருள் / மூலதனப் பொருள் (.........)

17. அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைளுள் ஒன்றான இறைக்கொள்கை என்பதனால் கருதப்படுவது?
    1. வட்டி வீதமும் கடன் கட்டுப்பாடும் தொடர்பான கொள்கை
    2. வரியும் அரச செயலும் தொடர்பான கொள்கை
    3. அந்நியச் செலவணியும் பணநிரம்பலும் தொடர்பான கொள்கை
    4. பணநிரம்பலும் கடன் கட்டுப்பாடும் தொடர்பான கொள்கை
    5. வரியும் இறக்குமதிக் கட்டுப்பாடும் தொடர்பான கொள்கை. (.........)

18. இலாபமீட்டும் நோக்கம்,பரஸ்பர முகவராண்மை, சட்டரீதியான தனிமனித அந்தஸது என்பவற்றை கொண்ட வணிக அமைப்பு வகைகளை ஒழுங்கு முறையில் கொண்ட சரியான விடைத்தொகுதி
    1. பங்குடைமை / வரையறுக்கப்பட்ட கம்பனி / அரசகம்பனி
    2. தனியார் உவமைவணிகம் / பங்குடைமை/ அரச கூட்டுத்தாபனங்கள்.
    3. பங்குடைமை/அரச கூட்டுத்தாபனங்கள் / வரையறுக்கப்பட்ட கம்பனி
    4. அரச கூட்டுத்தாபனங்கள் / அரச கம்பனிகள் / பங்குடைமை
    5. அரச கூட்டுத்தாபனங்கள் / பங்குடைமை/ தனியார் / உடமை வணிகம் (.........)

19. மின்சார இயலளவு 50 கிலே வாட்ஸ் அம்பியரை விடக் குறைவாக பயன்படுத்தப்படும் வணிகங்கள் இலங்கையில் சிற்றலளவு வணிகங்களாகும் எனும் நியதிகளினப்படையில் சிற்றளவு வணிகங்களை வகைப்படுத்திய நிறுவனம்
    1. கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB)
    2. சிறிய கைத்தொழிற் திணைக்களம் (SID)
    3. குடிசன புள்ளி விபரத் திணைக்களம் (SD)
    4. இலங்கை மத்திய வங்கி (CBSL)
    5. கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் (IDD) (.........)

20. தற்போது இலங்கை அரசாங்கத்திற்கு மிகவும் உயர்வான வருமானத்தை பின்வரும் வரிகளில் எது தருகின்றது.

    1. பெறுமதி சேர் வரி (VAT) 2. சுங்கத் திர்வை 3. கலால் வரி

    4. கூட்டுறு வரி 5. வருமான வரி (.........)

21. பங்குடைமையுடன் தொடர்புபட்ட வகையில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

    1. பங்குடமை உடன்படிக்கை எப்பொழுதும் எழுத்து வடிவில் காணப்பட வேண்டும்.

    2. சகல பங்காளர்களும் வணிக செயற்பாட்டிவ் ஆர்வமாக இயங்க வேண்டும்.

    3. ஒரு உடன்படிக்கை இல்லாமல் கூட பங்குடமையொன்று காணப்பட முடியும்.

    4. குறிப்பாக ஒரு வணிகத்தை நடத்த பங்காளர்கள் இணங்கிக் கொள்ளல் வேண்டும்.

    5. பங்குடமையில் சட்ட ரீதியான ஆளுமை காணப்படுகின்றது. (.........)

22. பின்வருவனவற்றில் தனியுடமை வணிகத்தின் அனுகூலம் எது?

1. வரையறுத்த பொறுப்பு
2. வரையறுக்காத பொறுப்பு
3. நீண்டகாலம் தொழிற்படும் தன்மை
4. மூலதனத்தைப் பெற முடிதல்
5. இலகுவாக உருவாக்க அல்லது ஒழுங்குபடுத்த முடிதல். (.........)

23. பின்வரும் அட்டவணையில் வணிக அமைப்புக்களும் அவற்றுடன் தொடர்புடைய சட்டங்களும் தரப்பட்டுள்ளன.

| வணிக அமைப்புக்கள் | தொடர்புடைய சட்டங்கள் |
|---|---|
| 1. தனிவியாபார அமைப்பு | A. 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டம் |
| 2. பங்குடமை அமைப்பு | B. 1972 ஆம் ஆண்டு 5ம் இலக்க கூட்டுறவுச் சட்டம் |
| 3. வரையறுக்கப்பட்ட அரசாங்க கம்பனி | C. 1840 ஆம் ஆண்டு மோசடி தடுப்புச் சட்டம் |
| 4. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் | D. பராளுமன்ற, பொது விசேட சட்டம் |
| 5. கூட்டுத்தாபனங்கள் | E. வியாபார பெயர்ப் பதிவுச் சட்டம் |

இவற்றை இணைத்தால் கிடைக்கும் சரியான விடைத் தொகுதி.

1. 1E,2C,3A,4B,4D 2. 1A,2B,3C,4D,4E 3. 1A,2B,3C,4E,4D

4. 1A,2C,3B,4D,4E 5. 1D,2A,3B,4E,4C (.........)

24. முயற்சியாண்மை அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகள் அடங்கிய தொகுதியை தெரிவு செய்க.

1. கல்வி மட்டம் / குடும்பப் பின்னணி / அர்ப்பணிப்பு / சட்டப்பின்னணி
2. கல்வி மட்டம் / அர்ப்பணிப்பு / போட்டித்தன்மை / சட்டப்பின்னணி
3. அனுபவம் / அர்ப்பணிப்பு / முன்மாதிரியான நடத்தை / குடும்பப் பின்னணி
4. பொருளாதார கொள்கை / சட்டப் பின்னணி / உட்கட்டமைப்பு வசதிகள் / போட்டித்தன்மை
5. பெற்றோர் எதிர்ப்பார்ப்பு / இணையத் தொடர்பு / முன்மாதிரியான நடத்தை / பொருளியல் கொள்கை

(.........)

25. கூட்டுறவு நிறுவனம் தொடர்பாக அட்டவணை X ஐ அட்டவணை Y உடன் பொருத்துக.

| X | Y |
|---|---|
| 1. விரும்மியவாறு சேரல் விலகல் | A- ஜனநாயகம் |
| 2. அங்கத்தவர்கள் சமமான (ஒரு) வாக்கைப் பிரயோகித்தல் | B. சமத்துவம் |
| 3. சமூக நலன்களை அபிவிருத்தி செய்தல் அங்கத்துவம் | C. சுய |
| 4. அங்கத்தவர்கள் வேறுபாடுகள் இன்றி இணைதல் | D. நம்பிக்கை |
| 5. அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து தொழிற்படல் | |

1. 1-A, 2-B, 3-C, 4-D, 5-E
2. 1-B, 2- C, 3-D, 4- E, 5A
3. 1-C, 2-A, 3-E, 4- B, 5-D
4. 1-D, 2-E, 3-A, 4-B, 5-C
5. 1-E, 2-D, 3-C, 4-B,5-A

26. கம்பனியின் ஆண்டு விபரத்திரட்டு என்பதன் கருத்து.

1. கம்பனியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பின் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பப்டும் ஆவணம்
2. கம்பனி ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பின் பங்குதாரர்களுக்கு பின் பங்குதாரர்களுக்கு அனுப்பும் ஆவணம்
3. ஆண்டு காலப்பகுதியில் கம்பனியில் இடம்பெற்ற விடயங்களை உள்ளடக்கி கம்பனிப்பதிவாளருக்கு அனுப்பும் ஆவணம்
4. கம்பனி இயக்குனர்சபைக் கூட்டத்தின் பின் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பும் ஆவணம்
5. கம்பனியின் பங்குவழங்கல் பற்றி கம்பனிப்பதிவாளருக்கு அனுப்பப்படும் ஆவணம்

27. இந்தியாவின் புகையிரத கட்டுமான தனியார் நிறுவனமொன்றும் இலங்கையின் புகையிரத அபிவிருத்தி சபையும் வடக்கு புகையிர பாதை அபிவிருத்தி தொடர்பில் ஒன்றிணைதல் எவ்வாறு அழைக்கப்படும்

1. நிலைக்குத்தான இணைப்பு
2. கிடையான இணைப்பு
3. கூட்டு முயற்சி
4. உற்பத்திப் பொருள் விரிவாக்கல் இணைப்பு
5. சந்தை வரிவாக்கல் இணைப்பு

28. பின்வரும் அமைப்புக்களில் அங்கத்தவர்களின் இழிவெண்ணிக்கையைக் காட்டும் சரியான தொகுதியைத் தெரிக.

| | பொதுக்கம்பனி | தனியார் கம்பனி | உத்தரவாத்தால் வரையறுத்த கம்பனி | கூட்டுறவுச் சங்கம் |
|---|---|---|---|---|
| 1. | 2 | 2 | 1 | 2 |
| 2. | 1 | 7 | 1 | 2 |
| 3. | 2 | 15 | 2 | 2 |
| 4. | 7 | 50 | 2 | 2 |
| 5. | 1 | 10 | 1 | 2 |

29. பங்காளர்களின் வகைகளும், அவற்றின் பண்புகளையும் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பங்காளர் | பண்புகள் |
|---|---|
| 1.உறங்கும் பங்காளர் | A. பங்குடமை நிர்வாகத்தில் ஈடுபடாத பங்காளர் என பொதுமக்கள் அறிந்த பங்காளர். |
| 2.அமைதிப் பங்காளர் | B. பங்குடமையின் வருடாந்த இலாபத்திற்கு ஏற்ப வட்டி வருமானத்தை பெற்றுக்கொள்ளல். |
| 3.பெயரளவுப் பங்காளர் | C. பங்குடமையின் பங்காளர் என பொதுமக்களால் அறிந்திராத பங்காளர். |
| 4.போலிப் பங்காளர் | D. தமது நற்பெயரினை பங்குடமையில் பயன்படுத்துவதற்கு உரிமை வழங்கியுள்ள பங்காளர். |
| 5.வயதடையாப் பங்காளர் | E. பங்குடமை நிர்வாகத்தில் ஈடுபடாத பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள பங்காளர். |

பங்காளர்களையும் அவர்களின் பண்புகளையம் சரியாகக் காட்டும் தொகுதியாக அமைவது?

1. 1 – C, 2 – A, 3 – D, 4 – B, 5 – E
2. 1 – D, 2 – A, 3 – C, 4 – B, 5 – E
3. 1 – E, 2 – B, 3 – D, 4 – A, 5 – C
4. 1 – C, 2 – A, 3 – B, 4 –E, 5 – C
5. 1 – A, 2 – D, 3 – B, 4 – E, 5 – C

30. சிறிய வியாபாரம் ஒன்று பின்வருவனவற்றுள் எச்சந்தர்ப்பத்தில் வெற்றிகரமாகச் செயற்பட முடியும்.
1. பேரளவு வியாபாரங்களால் புறக்கணிக்கப்பட்ட சந்தையில் கவனம் செலுத்தவதன் மூலம்
2. பேரளவு வியாபாரங்களினால் வைத்திருக்கப்படும் சந்தையில் நுழைவதன் மூலம்
3. வெளிநாட்டுச் சந்தையில் நுழைவதன் மூலம்
4. நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம்
5. விளம்பரப்படுத்தலையும் விற்பனை மேம்படுத்தலையும் விரிவாக்குவதன் மூலம்.

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**

31. (அ)உருவாக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு செயற்படவேண்டிய விதம் பற்றி வழிக்காட்டப்படும் குறிக்காட்டி……………………………….. ஆகும்.

(ஆ)ஒரு கருமத்தை மேற்கொள்ளும்போது செய்யவேண்டிவை எவை? செய்யக்கூடாதவை எவை? என்பவற்றை திட்டவட்டமாக குறிப்பிட்டு தயாரிக்கும் ஆவணம்…………………………… ஆகும்.

32. (அ)தேவை/விருப்பத்தை புர்த்தி செய்வதற்கு கொண்டிருக்கின்ற இயலுமையை பற்றி நுகர்வோர் மேற்கொள்ளும் கணிப்பீடு …………………………… என்பதோடு உற்பத்தி பொருளை ……………………, ……………………………. கொண்டு வேறுப்படுத்தி கொள்ளலாம்.

(ஆ)…………………………… உற்பத்தியில் வணிகங்களை காண முடியாது என்பதோடு அதன் காரணமாக……………………………. ஏற்பட்டதோடு அதன் விளைவாக …………………………….. உற்பத்தி உருவானதோடு இதனால் ………………………… முறை உருவானது.

33. (அ)பொருட்களுக்கான சேவைகளுக்கு கேள்வியானது ………………………………….. அடிப்பையில் உருவாவதுடன் அது………………………….. ஊடாக ஒரு பயனுறுதிமிக்க கேள்வியாக மாற்றமடையும்.

(ஆ)ஒரு நாட்டின் ………………………………….. மற்றும்……………………….. வணிகங்கள் பங்களிப்பு செய்கின்றன.

34. (அ)உலகலாவிய ரீதியில் உருவாக்கப்படும் முயற்சியான்மை ……………………………… என்பதோடு சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் முயற்சியான்மை ……………………………………… ஏன அழைக்கப்படும்.

(ஆ)பசுமை உற்பத்தில் பயன்படுத்தப்படும் மூன்று கழிவு முகாமைத்துவ நடைமுறைகளாவன ……………………, …………………., ………………………… என்பவற்றை குறிப்பிடலாம்.

35. (அ)கம்பனி ஒன்றில் பங்குதாரராவதற்கு கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய இரண்டு நிபந்தனைகள் ……………………….. உம் ………………………….. ஆகும்.

(ஆ)இலங்கையில் காணப்படும் அங்கீகார வணிகங்களுக்கு இரண்டு உதாரணங்கள் ………………………….. உம் ………………………….. உம் ஆகும்.

36.(அ)இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் வணிகம் ஒன்றை நடாத்தி செல்லும் தனி நபர்களுக்கிடையே காணப்படும் ……………………………….. என அழைக்கப்படுவதுடன் இதன் நடவடிக்கைகளை ஆரம்பித்து நடாத்தி செல்ல அதன் உறுப்பினர்களால் ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஓர் உடன்பாடு …………………………… எனப்படுவதுடன் இது ……………………………………, ………………..................., ......................................... ஆகிய முறைகளில் தோற்றுவிக்கப்படும்.

(ஆ)கூட்டுறவு அமைப்பில் ஒவ்வொறு அங்கத்தவர்களுக்கும் ஒவ்வொறு வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும் என்பது ……………………………. னை எடுத்துக்காட்டுகின்றது.

37. (அ)நபர் ஒருவர் தனது மகளின் பெயரை பயன்படுத்தி “யசோதா உணவு விற்பனைச் சேவை” என்ற வணிகத்தை ஆரம்பபின் அதனை ……………………………………… சட்டத்தின் மூலம் ………………………………………… ல் பதிவு செய்து கொள்ள முடியும்.

(ஆ)சிறந்தவற்றை அமுல்படுத்தும் வகையில் வணிக நடவடிக்கைளை நல்லவையா கெட்டவையா என மதிப்பிடுவது வணிக ………………………….. எனவும். மனித மற்றும் இயற்கைச் சூழல் அபிவிருத்தியை நோக்கிய வகையிலான வணிகங்கள் சார்பான கடப்பாடுகள் ……………………………………. எனவும் அழைக்கப்படும்.

38. (அ)அன்றாட தேவைக்கு பயன்படுத்தாத பண்டங்களை ………………………………….. எனவும் அன்றாட தேவைக்கு பயன்படுத்தப்படுத்த தொடர்ந்து கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் ………………………….. எனவும் அழைக்கப்படும்.

(ஆ)தனியுடைமையாளர் தனிப்பட்ட வகையில் ……………………………… கொண்டிருப்பதுடன் வணிகத்தின் ……………………………….. அடிப்படையில் வரி செலுத்துபவராகவும் காணப்படுகின்றார்.

39. (அ)நிறுவன வணிக நடவடிக்கைகளில் பங்குப்பற்றுவதற்கான ……………………………… பங்காளர்கள் கொண்டுள்ள அதேசமயம் அவர்கள் ஆர்வத்துடன் வணிக நடவடிக்கைகளில் பங்குப்பற்றுவதற்கான ………………………… கொண்டுள்ளார்கள்.

(ஆ)இடர்களை தாங்கிக்கொண்டு ………………………………… உருவாக்கும் நபர் முயற்சியாளர் எனப்படுவதுடன் அவர் எப்பொழுதும் ………………………………….. ஆகக் காணப்படமாட்டார்.

40. (அ)காப்புறுதி ஒப்பந்தமொன்றின் செயற்பாட்டின்னுாடக உருவாகும் வெளிவாரித்தரப்பினர் ………………………………….. தரப்பினர் எனப்படுவதுடன் இழப்பீட்டுத்தத்துவம் …………………………………… காப்பறுதியுடன் தொடர்புப்படுவதில்லை.

(ஆ)வேலைப் பிரிப்பின் பெறுபேறு தனிப்பட்டவர்களின் ……………………………. ஐயும் மேலதிக உற்பத்திப்பொருட்களின் பறிமாற்றம் ………………………….. ஐயும் உருவாக்குகின்றது.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடை எழுதுக.**

41. அக்கறையுடைய தரப்பினராக அரசாங்கமானது பாடசாலைகளின் மீது அக்கறை செலுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் நான்கை எழுதுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………

42. நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கு தருக.

1. ……………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………....
3. ……………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………

43. 1995 ம் ஆண்டு மன்செஸ்டர் மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவு கோட்பாடுகள் நான்கினை குறிப்பிடுக

1. ………………………………………………………………………………………………
2. ………………………………………………………………………………………………
3. ………………………………………………………………………………………………
4. ………………………………………………………………………………………………

44. பின்வரும் நியமங்களுக்கு பொருத்தமான சான்றுப்படுத்தல் முறைமைகளை எழுதுக.

1. ISO 9001:2015 …………………………………………………………………………..
2. ISO 14001 : 2015 ……………………………………………………………………….
3. ISO 22000 : 2005 …………………………………………………………………………
4. ISO 26000 ………………………………………………………………………………..

45. இலத்திரனியல் வியாபாரம் நிகழும் நான்கு வழிகளைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………..
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….

46. காப்புறுதி செய்ய முடியாத இடர்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.

1. ………………………………………………………………………………………….
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….

47. இலங்கை காப்புறுதி சபையினால் நிறைவேற்றப்படும் நான்கு பணிகளை குறிப்பிடுக.

1. ………………………………………………………………………………………….
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….

48. நுகர்வு பொருட்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும் அவை எவை.

1. ………………………………………………………………………………………….
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….

49. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்களின் நான்கு பிரதான பங்களிப்புக்களை குறிப்பீடுக

1. ………………………………………………………………………………………….
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….

50. வணிகம் ஒன்றுக்கு ஆரம்பம் முதல் இறுதி வரை பல்வேறு வகையான ஆதரவு சேவைகள் தேவைப்படுகின்றன இலங்கையில் அவ்வாறன சேவைகளை வழங்கும் அரசாங்க நிர்வாக கட்டமைப்பு மட்டங்கள் நான்கை பெயரிடுக.

1. ………………………………………………………………………………………….
2. ………………………………………………………………………………………….
3. ………………………………………………………………………………………….
4. ………………………………………………………………………………………….